ஆட்களை வைக்கிறார்கள். அவர்களுக்குக் கூட 450 ரூபாய், 350 ரூபாய் மட்டுமே சம்பளமாக வழங்கப்படுகிறது. அது மட்டுமல்ல. தினக்கூலி அடிப்படையில் 750 ரூபாய் சம்பளத்தில் ஒவ்வொரு டிபார்ட்மென்ட்டிலும் 40 பேர், 50 பேர், 60 பேர் நீண்ட காலமாக பணியாற்றி வருகிறார்கள். நன்றாகப் படித்து பட்டம் பெற்றவர்கள் கூட வறுமையின் காரணமாக இது போன்ற பணிகளில் ஈடுபட்டு தங்கள் வாழ்க்கையை வீணடித்துக் கொள்ளுகின்ற நிலைக்குப் போய் இருக்கிறார்கள். இப்படியாக ஏறத்தாழ 1,000 ஊழியர்கள் ஆண்டுதோறும் பாதிக்கப்பட்டு குறைந்த சம்பளம், தினக்கூலி அடிப்படையில் தற்காலிகப் பணியினால் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுடைய சர்வீஸ் காலத்தை இழப்பதோடு எதிர்காலமும் பாதிக்கப்படுகிறது. அவர்கள் எந்த நேரத்திலும் வேலை இழக்கும் சந்தர்ப்பம் உள்ளது. ஆகவே, இதில் தலையிட நம்முடைய அரசுக்கு அதிகாரம் உள்ளதா? அவர்களுக்கு நிரந்தரப் பணி வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒரு 'ரெசிடென்ஷியல் யுனிவர்சிட்டி' என்று இருப்பதால் நேரடியாக அரசு தலையிடுவதற்கு வாய்ப்பு இல்லை. இருந்தாலும் அங்கே பணியாற்றுகின்ற பணியாளர்களிடமிருந்து இப்படிப்பட்ட கோரிக்கை அரசுக்கு வரவில்லை. அவர்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றால் இது குறித்து அரசு ஆராய்ந்து மேல் நடவடிக்கைத் தொடரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 76, திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

76—

திருச்சி சிந்தாமணி அருகே பேருந்து நிலையம்.

*11082—திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி சிந்தாமணி அருகே ஒரு பேருந்து நிலையம் அமைப்பது அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1993 அக்டோபர் 29

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சி மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள ராஜாஜி காச நோய் மருத்துவமனை வளாகம் நிலத்தை உபயோகித்து நவீனப் பேருந்து நிலையம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற பேருந்து நிலையம் திருச்சியின் தென் பகுதியில் ஜங்ஷனில் இருப்பதால் திருச்சியின் வடக்குப் பகுதியிலும் மேற்குப் பகுதியிலும் செல்லுகின்ற பேருந்துகளும் மற்ற வாகனங்களும் திருச்சியின் மையப் பகுதிக்குச் சென்று அதற்குப் பின்னால் செல்ல வேண்டியிருக்கிறது. திருச்சி திட்டமிட்டு அமைக்கப்பட்ட ஒரு நகரமும் அல்ல. அதனால் மிகக் குறுகிய சாலைகளாக இருக்கின்றன. அத்தனைப் பேருந்துகளும் மற்ற வாகனங்களும் செல்லுகின்ற காரணத்தால் மிகவும் நெருக்கடியாக இருக்கிறது. ஆகவே, நகரிலுள்ள மக்களின் சிரமத்தை உணர்ந்து வடக்குப் பகுதியில் ஒரு பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்றுதான் சிந்தாமணியில் 1989 ஆம் ஆண்டு நில ஆர்ஜிதம் செய்ய சர்வே செய்யப்பட்டது. ஆகவே, இந்தப் பேருந்து நிலையத்தை வடக்குப் பகுதியில் அமைத்தால் திருச்சி மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும். அதனால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதை உணர்ந்து, மக்களுடைய வசதியை உணர்ந்து, வடக்குப் பகுதியிலே அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. பாப்பா சுந்தரம் அவர்கள் சொல்லியதைப் போல திருச்சியின் வடக்கே அமைந்திருக்கின்ற சிந்தாமணியிலே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அமைக்கப்பட்ட பிறகுதான், சுமார் 7,47,188 சதுர அடி நிலம் எடுப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே 4 (1) நோட்டிஃபிகேஷன் அடிப்படையில் நில ஆர்ஜித நடவடிக்கை மேற் கொள்ளப்பட வேண்டியிருப்பதால் காலதாமதம் ஏற்படுகிற சூழ்நிலை உருவாகி இருக்கிறது. ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உடனடியாக நில எடுப்புக்குண்டான முன்மொழிவுகளை அரசுக்கு அனுப்ப அரசு கோரி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல் இந்த நடவடிக்கைகள் தவிர ஏற்கெனவே உள்ள மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள நகராட்சிக்குச் சொந்தமான ராஜாஜி காசி நோய் மருத்துவமனை வளாகம்

1993 அக்டோபர் 29]

நீங்கலாக அங்கே இருக்கிற நிலப் பகுதியைப் பயன்படுத்தலாம் என்ற கருத்துரு இருந்து, தற்போது அந்த மத்திய பேருந்து நிலையத்தை விரிவு படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும் போது திருச்சி நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் அந்த பஸ் ஸ்டாண்ட் அமைப்பதாகக் கூறினார்கள். ஆனால் மதுரையை எடுத்துக் கொண்டால் புறநகர்ப் பகுதியில் பஸ் ஸ்டாண்ட் தனியாகப் பிரிக்கப்பட்டு மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதே போல் திருச்சி நகரத்திலும் பஸ்கள் அதிகமாக வந்து........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆரோக்கியசாமி, புற நகர்ப் பகுதி அல்ல. மதுரை மாநகராட்சிப் பகுதிக்குள்ளேதான் இருக்கிறது. ஆகவே என்னையும் உட்கார வைத்துக் கொண்டு தவறான தகவல் தர வேண்டாம். திருச்சியைப் பற்றி மட்டும் கேளுங்கள்.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் இருப்பதைப் போல், வெளியூர்களிலிருந்து வருகிற பேருந்துகளை எல்லாம் நிறுத்துவதற்கு தனியாக வைக்கிற வகையில் தனித்தனி பேருந்து நிலையங்கள் அந்தந்தப் பகுதியில் ஏற்படுத்தி விட்டால் திருச்சி நகராட்சிக்கு உட்பட்டிருக்கிற மத்திய பேருந்து நிலையத்தில் வந்து குவிகிற அந்த குவிப்புத் தன்மை குறைந்து விடும் என்பதால்தான் இதை நான் சொல்கிறேன். ஆகவே மதுரையை உதாரணம் காட்டினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுரையைத் தவறான உதாரணத்திற்குக் காட்டாதீர்கள். நல்ல உதாரணத்திற்குக் காட்டுங்கள். இப்போது நீங்கள் சொல்வதைப் பொறுத்த வரையில்கூட மதுரையிலே அப்படி இருக்கக் கூடாது என்கிற கோரிக்கைதான் இருக்கிறது. எனவே வேறு கேள்வி கேளுங்கள்.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை போன்று இதையும் அமைக்க வேண்டும். மதுரையைக் கவனிக்கிற அளவுக்கு திருச்சியையும் கவனிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கூறியதைப் போல் மதுரையில் மாநகராட்சிக்கு உட்பட்ட இடத்தில் மாட்டுத்தாவணி என்ற இடத்தில் ஒரு நவீனப் பேருந்து நிலையம் கட்டுவதற்காகக் கடந்த வாரத்தில் சுமார் 20 கோடி மதிப்பீட்டில் முதற் கட்டமாக 5 கோடி ரூபாய் செலவில் மதுரையில் நவீனப் பேருந்து நிலையத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது என்பது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். அதே போல் தான் திருச்சியிலும் அதே அடிப்படையில்—அதாவது மதுரையில் எந்த அளவிற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறதோ அந்த அளவுக்கு ஒருங்கிணைந்த ஒரே பேருந்து நிலையமாக ஒரே இடத்தில் பேருந்துகள் புறப்படுகிற நிலையமாக திருச்சி சிந்தாமணிக்கு அருகே அமைக்க அந்த நில ஆர்ஜிதத்திற்காக மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே முன்மொழிவுகளை கேட்டிருக்கிறோம். அதே போல் இருக்கிற மத்திய பேருந்து நிலையத்தை விரிவு படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே அந்த அடிப்படையில் திருச்சி நகராட்சியில் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு காலத்தில் ஒரு நவீன பேருந்து நிலையம் அனைத்து வசதிகளையும் கொண்ட பேருந்து நிலையமாக அமைய இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 77, திரு. ஏ.டி. செல்லசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

77—

நரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் காளான் வளர்த்தல், கோழிப் பண்ணை அமைத்தல்.

* 11400— திரு. ஏ.டி. செல்லசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—